கள். இருந்தாலும் இதற்கான சோதனை தீவிரப்படுத்தப்பட்டு குற்றங்கள் களையப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 9-30)

திரு. ரா. சொக்கர் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பெர்மிட் இல்லாமல் ஓடக்கூடிய ஆட்டோக்களைத் தடுப்பதற்குப் பேருந்துகளில் ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர் போக எப்படி இன்னொரு நம்பரும் எழுதப்படுகின்றதோ, அதே போல ஆட்டோ ரிக்ஷாவில் அந்த பெர்மிட் நம்பரை எழுதி விட வேண்டும் என்ற விதிமுறை செய்யப்பட்டால் இந்த பெர்மிட் இல்லாமல் ஓடக்கூடிய ஆட்டோக்களைத் தடுத்து அரசாங்கத்திற்கு முறையான வருமானம் வருவதற்கான வழிவகை செய்வதற்கு பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதே அவற்றின் பெர்மிட் நம்பர் குறிக்கப்பட வேண்டும் என்ற விதிமுறைகள் உள்ளன. சில ஆட்டோக்களிலே குறிக்காமல் வைத்திருக்கிறார்கள். அதுகூட விதிமுறைகளின்படி தவறுதான். பெர்மிட்டினுடைய எண்கள் குறிக்கப்பட வேண்டும். குறிக்கப்பட்டிருக்கிறதா என்பது எதிர்காலத்திலே கண்காணிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் கவனத்திற்கு—இன்னும் 15 வினாக்கள் எஞ்சியிருக்கின்றன.

திருவாரூர்—சென்னை பேருந்து

194—(*வினா எண். 757) திரு. மா. மண்மாறன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் திருவாரூர்—சென்னை—வழி—நன்னிலம்—பேருந்து விடும் செய்திக்குறிப்பு உள்ளதா?

1989 மே 4]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர் களே, இல்லை.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர் களே, ஒவ்வொரு வட்ட தலைநகரிலிருந்தும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் சென்னைக்குப் பேருந்துகளை விட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே நன்னிலம் பெரிய வட்டத்தி னுடைய தலைநகராக இருக்கிறது. அரசு அலுவலர்களும், ஏனையோர்களும், பொதுமக்களும், வழக்கு தொடர்பாக வும் சென்னைக்கு அடிக்கடி வர இருக்கின்ற காரணத்தி னாலே நன்னிலத்திலிருந்து, வட்டத் தலைநகரிலிருந்தாவது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் சென்னைக்குப் பேருந்து விட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னையிலிருந்து வேதாரண்யம் சென்னையிலிருந்து நாகப்பட்டினம் தடங்களில் இயக்கப் படுகின்ற பேருந்துகள் சன்னாநல்லூர் வழியாக இயக்கப்படு கின்றன. சன்னாநல்லூரிலிருந்து நன்னிலம் 4 கிலோ மீட்டர் தூரத்திலேதான் இருக்கிறது. எனவே இந்த வழித் தடங் களில் இயக்கப்படும் 6 பேருந்துகளை நன்னிலம் வழியாக இயக்கினால் 8 கிலோ மீட்டர்கள் அதிகமாகிறது. பயண நேரமும், கட்டண விகிதமும் அதிகரிக்கிறது. எனவேதான் இதில் நேரடி போக்குவரத்து வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து பரிசீலிக்கப்பட்டு நன்னிலத்திலிருந்து நேரடியாக சென்னைக்குப் போக்குவரத்து பேருந்து விடுவதற்குப் பயணிகள் விகிதம் அந்த அளவிற்கு இருக்குமா என்பது பரிசீலிக்கப்பட்டு எதிர்காலத்திலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது திருவாரூர்— நன்னிலம்— மயிலாடுதுறை சென்னைக்குத்தான், திருவாரூரிலிருந்து தனியார் சொகுசு பேருந்து ஒரே ஒரு வண்டி பயணி இல்லாமலே வந்து கொண் டிருக்கிறது. இப்போது தனியார் திருவாரூரிலிருந்து 3 சொகுசு பேருந்துகள் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். பேருந்து திருவாரூரிலிருந்து நெரிசல் அதிகமாக சென்னைக்கு

வருகின்ற காரணத்தினாலே திருவாரூர், நன்னிலம், மயிலாடு துறை வழியாக சென்னைக்குப் பேருந்து விட்டால் வசூலில் குறைவு இருக்காது என்பதைத் தெரிவித்து அதை விடு வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர்—சென்னை வழி நன்னிலம் பேருந்துகளுடைய வழித்தடத்தை பற்றி உறுப்பினர் குறிப் பிட்டிருக்கிறார். அதுவும் பரிசீலனை செய்யப்பட்டு போதுமான அளவுக்குப் பேருந்தில் வசூலாகக்கூடிய நிலை மை இருக்குமானால் அந்த வழித் தடத்திலேயும் பேருந்து விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. வி. தம்புசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட தூரம் செல்லுகின்ற பேருந்துகளில் ஜாக்கி கிடை யாது, ஸ்டூல் கிடையாது, குடிப்பதற்குத் தண்ணீர் கிடை யாது, நல்ல டயர் கிடையாது. இப்படிபட்ட நிலைமைகளை மாற்றி...............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் திருவாரூர்க் காரர் என்பதனால் உங்களுக்கு திருவாரூருக்கு வாய்ப்பு அளித்தேன். நீங்கள் நீண்ட தூரம் போகிறீர்கள்.

திரு. வி. தம்புசாமி: திருவாரூர் வந்து போகும் வண்டி களுக்கு இந்தச் சாமான்கள் வழங்கி வண்டி விடப்படுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் தலைவர் அவர்களே, திரு வாரூக்கு மட்டும் அல்ல. தமிழகம் முழுவதும் நீண்ட தூரம் செல்லக்கூடிய பேருந்துகளில் டயர் கன்டிஷனாக இருந்தாலும் அல்லது வண்டியினுடைய பொதுவான கண்டிஷன் நல்ல முறையிலே இருக்க வேண்டும் என்ற நோக்கம்தான் இந்த அரசு கொண்டிருக்கிறது. இருந்தாலும் கூட குறைகள் பேருந்துகளிலே நிறைய இருக்கின்றன என்பது போக்குவரத்துத் துறையினுடைய மானிய விவாதத்தின் போது இங்கே எடுத்து சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் நீண்ட தூரம் பேருந்து களை இயக்கிக்கொண்டிருக்கிறது. அதிலே முன்பெல்லாம்

1989 மே 4]

சுத்தமான குடிநீர் வைக்கப்பட்டு போய் வருகின்ற பயணி களுக்கு வசதி செய்யப்பட்டிருந்தது. கொஞ்ச நாட்களாக அந்தக் குடிநீர் வசதி கூட இல்லை. இங்கே மாண்புமிகு உறுப் பினர்கள் அந்தக் குறைகளை எல்லாம் தெரிவித்ததற்கு பிறகு தற்போது குடிநீர் வசதி உடனடியாக செய்யப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகத்திற்கு அறி வுறுத்தப்பட்டுள்ளது.

திரு. ஜி. பழனிச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாமண்டூர் என்கிற ஊரிலுள்ள நட்சத்திர ஹோட்டல்களில் அனைத்து திருவள்ளுவர்பஸ்களும நிறுத்தப்படுகின்றன. பிர யாணம் செய்யகூடியக் பிரயாணிகளும் அங்குள்ள ஹோட் டல்களிலே சாப்பிட்டு சிரமத்திற்கு ஆளாக்கப்பட்டு இருக் கிறார்களே, டிரைவர், கண்டக்டரைக் கேட்டால் அரசு அப்படி உத்திரவு போட்டிருப்பதாகச் சொல்கிறார்களே. ஆகவே, வேறு நகரங்களில் நிறுத்தி, உணவு உட்கொள்வதற்கு அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட உணவு விடுதிக்கு முன்னாலேதான் நிறுத்த வேண்டும் என்று அரசு எந்தவிதமான உத்தரவும் போட வில்லை. அதில் ஏதாவது குறைகள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பாரேயானால், நட வடிக்கை மேற்கொள்ளலாம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள்.

195—(*வினா எண். 869) திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம், பவானி சாகர், புஞ்சைப் புளியம்பட்டி, நம்பியூர் ஆகிய பகுதிகளில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?